NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 11 December 2020

# சுகாதாரத் துறையில் 5,500 வேலைகள்

சுகாதாரத் துறையில் கிட்டத்தட்ட 5,500 வேலைவாய்ப்புகள் உள்ளன. இதில் நான்கில் மூன்று நீண்ட காலப் பணிகள். இந்த 4,080 நீண்ட கால பணிகளில் 40 விழுக்காடு - அல்லது 1,530 வேலைகள் தாதியர், துணை சுகாதார வல்லுநர்கள், நிதி - மனிதவள நிர்வாகிகள் போன்ற நிபுணத்துவ, நிர்வாகப் பதவிகளாகும். ஏனைய 2,550 நீண்டகால வேலைவாய்ப்புகள் ஆதரவு சேவைகள், சிகிச்சை உதவியாளர்கள், நோயாளி சேவை உதவியாளர்கள் போன்றவையாகும்.

1,390 குறுகியகால வேலைகளில், 95% அல்லது 1,330 வேலைகள் ஆதரவு, நிர்வாக உதவி தொடர்பான வேலைகள் ஆகும். இந்தக் குறுகியகால வேலைகளில், ஏறக்குறைய 5 விழுக்காடு அல்லது 60 வேலைகள் நிபுணத்துவ, நிர்வாகப் பதவிகளாகும்.

இந்த 5,500 நீண்ட மற்றும் குறுகியகால வேலைகள் கடந்த மாத இறுதியில் இந்த துறையில் உருவாக்கப்பட்ட 6,700 வேலை, வேலைப் பயிற்சி, பயிற்சி வாய்ப்புகளின் ஒரு பகுதியாகும் என்று மனிதவள அமைச்சு நேற்று வெளியிட்ட வாராந்திர வேலை வாய்ப்பு நிலைமை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வேலைகளுடன், கிட்டத்தட்ட 470 நிறுவனங்கள் வழங்கும் பணியிடப் பயிற்சிகளும், 760 பயிற்சி வாய்ப்புகளும் உள்ளன.

நீண்டகால நிபுணத்துவ, நிர்வாகப் பதவிகளில் ஒன்றான தாதிமைப் பணிக்கு சேர்ந்த முதல் ஆண்டுக்குள் மாதச் சம்பளம் $3,300 முதல் $5,200 வரையும் சராசரி மாத ஊதியம் $3,900 ஆகவும் இருக்கும்.

துணை சுகாதார வல்லுநர்களின் சம்பளம் மாதத்திற்கு $4,100 முதல் 5,000 வரையும் சராசரி சம்பளம் $4,400 ஆகவும் இருக்கும்.

நீண்டகால ஆதரவு சேவைகளில் துணை நோயாளி சேவையாளர்கள் போன்ற வேலைகள் அடங்கும். அவர்கள் பொதுவாக மாதத்திற்கு $2,400 முதல் $3,000 வரை சம்பாதிக்கிறார்கள். சராசரி ஊதியம் $2,700 ஆக இருக்கும்.

சுகாதாரப் பராமரிப்பு உதவியாளர்கள் மற்றும் சிகிச்சை உதவியாளர்கள் மாதம் $1,800 முதல் $2,300 வரையும் சராசரியாக $2,100 ஊதியம் பெறுகிறார்கள்.

இதில் 80 விழுக்காட்டுக்கும் அதிகமான வேலைவாய்ப்புகளை சிங்ஹெல்த், தேசிய பல்கலைக்கழக சுகாதார அமைப்பு, தேசிய சுகாதார குழு போன்ற பொது சுகாதார குழுமங்களும், சமூக பராமரிப்பு நிறுவனங்களான ரென் சி மருத்துவமனை, வான்கார்ட் ஹெல்த்கேர், செயின்ட் லூக்கின் எல்டர்கேர் போன்றவையும் வழங்குகின்றன. ஏனைய வேலைகளை சிங்கப்பூர் பார்க்வே மருத்துவமனைகள், ஹெல்த்வே மருத்துவக் குழு, க்யூ&எம் பல் மருத்துவ மையம் உள்ளிட்ட தனியார் நிறுவனங்கள் வழங்குகின்றன.

ஏப்ரல் முதல் கடந்த மாதம் வரை சுகாதாரத் துறையில் ஏறக்குறைய 8,350 பேர் வேலை, வேலைப் பயிற்சி, பயிற்சி வாய்ப்புகளில் அமர்த்தப்பட்டதாக அமைச்சு தெரிவித்தது.

## சுகாதாரத்துறை ஊழியர்களுக்கான நீண்டகால தேவை அதிகரிப்பு

பொதுத்துறை, தனியார் துறைகள் உள்ளிட்ட சிங்கப்பூரின் சுகாதாரத் துறையில் 100,000க்கும் மேற்பட்டவர்கள் பணியாற்றுகின்றனர். அவர்களில், பல்வேறு துறை சார்ந்த மருத்துவர்கள், சுகாதாரத்துறை நிபுணர்கள் போன்றோர் கிட்டத்தட்ட 70 விழுக்காட்டினர். மற்ற 30 விழுக்காட்டினர் ஆதரவு சேவைகள், நிர்வாகம், துணைப் பணிகள் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளனர்.

கிருமிப் பரவல் நிலவரம், சுகாதாரத்துறையில் தற்காலிக மனிதவளப் பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளது.

கிருமித்தொற்றுச் சோதனையாளர்கள், அவர்களின் உதவியாளர்கள், பராமரிப்புத் தூதர்கள் போன்ற வேலைகளுக்கு பலர் தேவைப்படுகின்றனர். கிருமிப் பரவலால் ஏற்படுத்தப்பட்ட சிறப்பு வசதிகளிலும் மருத்துவக் கூடங்களிலும் பணியாற்ற தாதியர், மருத்துவர்கள் உள்ளிட்ட நிபுணத்துவம் பெற்றவர்களின் தேவையும் தொடர்கிறது.

நீண்டகால நோக்கில், மூப்படைந்து வரும் மக்கள்தொகையும் அதிகரித்துவரும் நாள்பட்ட நோய்களும் சுகாதார மனிதவளத்திற்கான தேவையை அதிகரிக்கும்.

ஒருங்கிணைந்த வசதிகள், பொது மருத்துவமனைகள், சமூக மருத்துவமனைகள், பலதுறை மருந்தகங்கள் போன்ற புதிய சுகாதார வசதிகள் படிப்படியாக உருவாக்கப்படும்.

புதிய பட்டதாரிகள், பணியிடை மாற்றத்தை விரும்புவோரின் எண்ணிக்கையை விரிவுபடுத்துவதற்கும், தற்போதுள்ள ஊழியர்களின் திறன் மேம்பாட்டுக்கான வாய்ப்புகளை வழங்குவதற்கும் இந்தhg துறையில் வளங்களை ஏற்படுத்த கடப்பாடு கொண்டிருப்பதாக மனிதவள அமைச்சர் ஜோசஃபின் டியோ நேற்று செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

சிங்கப்பூரர்கள் சுகாதாரத் துறையில் ஈடுபடுவதற்கும் அவர்களின் வாழ்க்கைத் தொழில் செழிக்க உதவுவதற்கும் அரசாங்கமும் தொழில் துறையும் மும்முனை அணுகுமுறையைக் கொண்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டது.

முதலாவது தற்போதுள்ள மாணவர்களை சுகாதாரத் துறை வேலைகளுக்குத் தயார்ப்படுத்துவது. இரண்டாவது சுகாதாரத் துறை பின்னணி இல்லாத பட்டதாரிகளும் பணியிடை மாற்றத்தை விரும்புவோரும் இத்துறையில் வேலை பெற ஆதரவளிப்பது.

மூன்றாவது ஏற்கெனவே இத்துறையில் பணிபுரிவர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சிகளையும் மேம்பாட்டு வாய்ப்புகளையும் வழங்குவது.

"மக்கள் சுகாதாரத் துறையில் வேலை செய்வது பற்றிச் சிந்திக்கும்போது, ஏதோ ஒரு வேலை என்று மக்கள் நினைப்பதில்லை. இது மிக உயர்ந்த அர்ப்பணிப்பைக் கோரும் வேலை என்பதையும் அவர்கள் அறிவார்கள்," என்றார் அமைச்சர் ஜோசஃபின் டியோ.



வலமிருந்து வர்த்தக, தொழில் அமைச்சர் சான் சுன் சிங், மனிதவள அமைச்சர் ஜோசஃபின் டியோ, சுகாதார மூத்த துணை அமைச்சர் கோ போ கூன், ஆகியோர் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் தாதிமைப் படிப்புக்கான ஆலிஸ் லீ மையத்தில் நடைபெறும் பயிற்சியைப் பார்வையிடுகின்றனர். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.